# Nature Worship and Beliefs of Ancient Tamils in Literature

**Dr. G. Kavitha**
*Researcher, Plot.10, Viruksha Garden Opposite*
*Mageswari Nagar, Maariamman Kovil, Thanjavur*

**Abstract**
*Beliefs are the result of a lack of understanding of natural phenomena or the failure in attempts to understand them. Specifically, the human race, which lived in harmony with nature, struggled to comprehend certain aspects and actions of nature, and this led to the emergence of beliefs. Beliefs become powerful factors that govern human life. Therefore, the beliefs that arose in each ethnic group were passed on to the next generation. Although early beliefs originated from the thoughts of individuals, over time they spread throughout the entire ethnic group and were passed on to subsequent generations. This research paper aims to examine these beliefs that have been passed down through generations, particularly those related to nature worship.*
***Keywords:*** *Beliefs, Sangam Literature, Silappathikaram, Worship, Family Deity, Water, Idol, Crescent Moon, Tree, Mountain, Evening Lamp*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18981353

**References**

1. Saradambal.C., Classical Literature, Ainthinai Publications, Chennai. 1988.
2. Gandhi.K., Tamil Customs and Beliefs, International Institute of Tamil Studies, Chennai. 2008.
3. Kailasapathy.K., Ancient Tamil Life and Worship, Kumaran Publications, Chennai. 1999.
4. Chidambaranar. Sami., Ettuthogai and Tamil Culture, Arivu Publications, Chennai. 2003.

# இலக்கியங்களில் பழந்தமிழரின் இயற்கை வழிபாட்டு முறைகளும் நம்பிக்கைகளும்

***முனைவர் கோ. கவிதா***
ஆய்வாளர், தஞ்சாவூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*இயற்கை நிகழ்வின் போக்குகளைப் புரிந்துகொள்ளாமையால் அல்லது புரிந்துகொள்ள முயலும் முயற்சிகளில் தோல்வியுற்றமையால் விளைந்தவை நம்பிக்கைகளாகும். குறிப்பாக, இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்து வந்த மனித இனமானது, இயற்கையின் சில கூறுகளை, செயல்களை அறிந்துகொள்ள முடியாமல் திணறியதின் விளைவே நம்பிக்கைகளின் தோற்றமாகும். நம்பிக்கைகள் மனித வாழ்வை இயக்கும் சக்திமிக்க காரணிகளாக அமைகின்றன. இதனால், ஒவ்வொரு இனக்குழுவிலும் தோன்றிய நம்பிக்கைகள் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்பட்டன. தொடக்ககால நம்பிக்கைகள் தனிமனிதனின் எண்ணத்தால் தோற்றம் பெற்றிருந்தாலும் காலம் செல்லச் செல்ல அவ்வினக்குழு முழுதும் பரவி, அடுத்த சந்ததியினர்க்கும் கொண்டு சேர்க்கப்பட்டது. அவ்வகையில் இயற்கை வழிபாடுகளில் தொன்றுதொட்டு வரும் நம்பிக்கைகளைப் பற்றி ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.*

***திறவுச் சொற்கள்:*** *நம்பிக்கைகள், சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், வழிபாடு, குலதெய்வம், நீர், பாவை, பிறை, மரம், மலை, மாலை நேர விளக்கு*

**முன்னுரை**

நம்பிக்கையானது அங்கங்கு வாழும் மனித இனத்தின் வாழிடச் சூழலுக்கேற்ப மாறுபாடு கொண்டதாகும். இனக்குழு சமுதாயமாக வாழ்ந்த பழந்தமிழ்ச் சமூகத்தில் பல்வேறு இனக் குழுக்கள் காணப்பட்டன. அவ்வினக்குழு மக்களின் வாழ்முறைக்கேற்ப நம்பிக்கையானது சிற்சில மாறுதல்களைக் கொண்டு விளங்குகின்றது. நம்பிக்கையானது உணர்ச்சி அடிப்படையிலோ அல்லது அந்நிகழ்வின் நன்மை தீமையை உணரும் அறிவின் அடிப்படையிலோ தீர்மானிக்கக் கூடியது ஆகும். மேலும், இதற்கு இதுதான் தீர்வெனக் கண்மூடித்தனமாக ஆராயாமல் ஏற்றுக் கொள்ளும் மரபும் நம்பிக்கையின் பாற்பட்டதாகும். தமக்கு நன்மை ஏற்படும் எனில், அந்நிகழ்வை அறிவு ரீதியாக ஆராயாமல் ஏற்றுக்கொள்வது மனித மனத்தின் உள்நம்பிக்கை ஆகும்.இந்நிலையிலேயே நம்பிக்கைகள் மக்களிடையே அசைக்க முடியாத நிலையினைப் பெற்று வருகின்றன.

தொடக்க கால மனிதர்கள் தங்கள் வாழ்வியலோடு இணைந்து, அவர்தம் வினைகளில் செயலாற்றும் பொருட்களை வணங்கினர். வழிபாடு என்பது தமக்கு நன்மை அளிக்கும் பொருளையும் தீமை செய்யும் பொருளையும் ஒன்றாக வணங்குவது ஆகும். நன்மை பயக்கும் பொருட்களுக்கு நன்றி செலுத்த வேண்டியும் தீமை புரியும் பொருட்களை அமைதிப்படுத்த வேண்டியும் வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டன. மனித ஆற்றலுக்கு மிஞ்சிய மற்றுமொரு ஆற்றல் இருப்பதை உணர்ந்த பழந்தமிழர்கள் அவற்றை வணங்கத் தொடங்கினர். தொடக்ககால வழிபாட்டின் துவக்கமாய் அமைந்தது அப்பொருட்களின் மீது மக்களுக்கு இருந்த அச்ச உணர்வே. அச்சத்தின் காரணமாகவே மனித வாழ்வில் வழிபாட்டு நம்பிக்கைகள் தோன்றின. நாடோடிகளாக வாழ்ந்த பழந்தமிழ்ச் சமூக மக்களின் முதன்மையான வழிபாட்டுத் தெய்வங்களாக இயற்கைக் கூறுகள் இருந்தன. அவற்றை வணங்குவதன் மூலம் அதனைத் தன்வயப்படுத்தமுடியும் என்று மக்கள் நம்பியதே வழிபாட்டு நம்பிக்கைகள் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாகும்.

பழந்தமிழர்கள் இயற்கையினைத் தெய்வமாகக் கருதி, அவற்றை வழிபடத் தொடங்கினர் என்பதை

"குகைகளிலும், மரப் பொந்துகளிலும் வாழ்ந்து வந்த கற்கால மனிதர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வினை மேற்கொண்டிருந்தனர். இயற்கையின் ஆற்றலைக் கண்டு வியந்தனர், பயந்தனர். எனவே, இயற்கையை இறைவனாகக் கருதி வணங்க முயன்றனர். தன் ஆற்றலுக்கும் மீறிய இயற்கைப் பொருள்களின் மீது அன்பும் பயமும் கொண்டனர். இவ்வச்சமும், அன்பும் அவ்வியற்கைப் பொருள்களுக்கு முன்னர் அவர்களை அடிமைப்படுத்தியது. இவர்கள் ஆறு, முகில், மழை, பரிதி, நிலவு போன்ற இயற்கைப் பொருள்களுக்கு இறைத்தன்மை கொடுத்து அவற்றை ஆன்மாவின் பொருளாகக் கருதினர்" (அ. கந்தசாமி; 2013:72,73) என்று "பழந்தமிழரின் பழக்கவழக்கங்கள்" எனும் நூல் குறிப்பிடுகிறது.

பழந்தமிழ்ச் சமூகத்தில் இயற்கை வழிபாடே அதிகம் காணப்பட்டதற்குச் சான்றாக, சிலப்பதிகாரத்தின் கடவுள் வாழ்த்துப் பாடல்களைக் கொள்ளலாம். மங்கல வாழ்த்துப் பாடல்களில் ஞாயிறு, திங்கள், மழை, புகார் நகர் முதலிய இயற்கையினையே இளங்கோவடிகள் வாழ்த்தி வணங்கி தன் காப்பியத்தைத் தொடங்குவதன் மூலம் இக்கருத்தை உறுதி செய்யலாம்.

செவ்விலக்கியங்களில் இடம்பெற்றுள்ள இயற்கை வழிபாட்டுக் கூறுகளை,

1. குலதெய்வ வழிபாடு
2. நீர் வழிபாடு
3. பாவை வழிபாடு
4. பிறை வழிபாடு
5. மர வழிபாடு
6. மலை வழிபாடு
7. மாலையில் விளக்கேற்றி வழிபடுதல்

எனும் நிலைகளில் பிரித்துக் காணலாம்.

## குலதெய்வ வழிபாடு

பழந்தமிழ் மக்கள் தன்குலத்தின் மூத்தோரைக் குலதெய்வமாகக் கருதி வணங்கினர். அவ்வாறு வணங்குதற்கு உரியோர் மாண்டவராகவோ, அகால மரணம் அடைந்தவராகவோ, நிறைவேறாத ஆசையுடன் இறந்தவராகவோ, ஆபத்தில் உதவியவராகவோ இருப்பர். குலதெய்வத்தின் பெயரைத் தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குச் சூட்டும் வழக்கம் காலங்கடந்து இன்றளவும் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு குலதெய்வப் பெயரைச் சூட்டுவதன் மூலம், அக்குழந்தைக்கு எவ்விதத் தீங்கும் நேராமல் அத்தெய்வம் காக்குமென நம்பினர்.

கோவலன் தனக்குப் பெண்குழந்தை பிறந்தபோது, அக்குழந்தைக்குத் தன் குலதெய்வத்தின் பெயரை வைக்கிறான். இந்நிகழ்வினை,

**உன்பெருந் தானத் துறுதி யொழியாது**
**துன்ப நீங்கித் துயர்க்கட லொழிகென**
**விஞ்சையிற் பெயர்த்து விழுமந் தீர்த்த**
**எங்குல தெய்வப் பெயரீங் கிடுகென**
**அணிமே கலையார் ஆயிரங் கணிகையர்**
**மணிமே கலையென வாழ்த்திய ஞான்று**
**(சிலம்பு. அடைக். 34 – 39)**

எனும் பாடலடிகளில் இளங்கோவடிகள் காட்சிப்படுத்துகிறார். அதாவது, கோவலனின் முன்னோன் ஒருவன் நடுக்கடலில் கரைசேர வழி தெரியாது தவித்தபோது, மணிமேகலா தெய்வம் அவன்முன்னே தோன்றி அவனைக் காப்பாற்றியது. அதுமுதல் அத்தெய்வம் கோவலன்வழி முன்னோர்களின் குலதெய்வமாக ஆனது. எனவே, அவன் தன் பெண்பிள்ளைக்கு "மணிமேகலை" எனும் பெயர் சூட்டி மகிழ்ந்தான் என்பதைக் காட்டுகிறது.

## நீர் வழிபாடு

உலகிலுள்ள எல்லா உயிரினங்களும் வாழ்வதற்கு அடிப்படை ஆதாரமாகத் திகழ்வது நீர் ஆகும். நீர் இல்லை என்றால் உயிரினங்களின் வாழ்வு கேள்விக்குரியதாகிவிடும். எனவே, மக்கள் நீரினை வழங்கும் மழை, ஆறு போன்றவற்றை வணங்கி விழாவெடுத்துக் கொண்டாடினர். அத்தகைய நீரையளிக்கும் மழை பொய்யாவிடில் வானுலகில் வாழும் தேவர்களுக்கு மக்கள் திருவிழா, பூசை களைச் செய்யமாட்டார்கள் என்பதை,

**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு (குறள்.18)**

என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

பெருக்கெடுத்து வரும் ஆற்றுநீரில் மலர்களைத் தூவி வழிபடும் மரபு பண்டைத் தமிழரிடையே காணப்பட்டது. ஆற்றுநீரில் நீராடுவதால் கிடைத்த இப்பலனை வாழ்நாள் முழுவதும் அளிக்கவேண்டி,

வையை ஆற்று நீரில் மாலைகளை இட்டு வணங்கியதை,

***தாமம் தலை புனை பேஎம் நீர் வையை!***
***நின் பயம் பாடி விடிவுற்று ஏமாக்க***
***நின் படிந்து நீங்காமை இன்று புணர்ந்தெனவே***
***(பரி.7: 84-86)***

எனும் பாடலடிகள் காட்டுகின்றன.

### பாவை வழிபாடு

பாவை வழிபாடு என்பது தெய்வத்தன்மை உடைய சிலையை - பொம்மையை உருவாக்கி வழிபடும் மரபாகும். பாவையானது மகளிர் வழிபாட்டின் இன்றியமையாதக்கூறாகும். இதனை "மன்றப்பாவை, தெற்றிப்பாவை, அல்லிப்பாவை, கொல்லிப்பாவை" எனப் பல்வேறு பாவைகள் மகளிர் வழிபாட்டிலும் விளையாட்டிலும் இடம் பெற்றன. சுவரில் பாவையை எழுதி வணங்குதல் தமிழர்களின் மரபு. பல்வேறு வகையான பாவை வழிபாடு வழக்கத்தில் இருந்தபோதும், கொல்லி மலையிலுள்ள மக்களைக் காக்கவேண்டி கொல்லிப் பாவையானது தெய்வத்தால் உருவாக்கப்பட்டது என நம்பினர். மேலும்,

***பயம் கெழு பலவின் கொல்லிக் குட வரைப்***
***பூதம் புணர்த்த புதிது இயல் பாவை (நற்.192:8,9)***

எனும் பாடலடிகள் கொல்லிப்பாவையானது பலா மரங்கள் நிறைந்த இடத்தில் இருந்தது என்பதைப் பதிவுசெய்கின்றன. மக்களைக் காத்து நிற்கும் கொல்லிப்பாவையானது தெய்வத் தன்மையுடனும் கண்களுடனும் காட்சி அளித்ததை,

**பெரும்பூண் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்**
***கருங்கண் தெய்வம் குடவரை யெழுதிய***
***நல்லியற் பாவை அன்னஇம் (குறுந். 89:4,7)***

எனும் அடிகள் காட்டுகின்றன. கொல்லிப் பாவையானது காற்று, மழை, இடி, மின்னல், பூகம்பம் போன்ற எவ்வித இயற்கைப் பேரழிவுகளாலும் சிதைக்க முடியாத தன்மையுடன் விளங்குபவை.

### பிறை வழிபாடு

இயற்கை வழிபாட்டின் அடிப்படையில் தோன்றியநம்பிக்கைகளுள்ஒன்றுபிறைவழிபாடு ஆகும். இஸ்லாம் சமூகத்தில் பிறையினை வணங்கும் நிலை இன்று முதன்மையானதாகக் காணப்படுகிறது. அமாவாசைக்குப் பிறகு பிறை வளர்வது போல், தாம் எண்ணக்கூடிய காரியமும் வளருமென்ற நம்பிக்கையின் காரணத்தால் பிறை வணங்கப்பட்டு வருகிறது. இன்றளவும் நல்ல காரியங்களை வளர்பிறையில் தொடங்கும் வழக்கத்தை மக்கள் பின்பற்றி வருவது இதற்குத் தக்க சான்றாகும். பெண்களே அதிக அளவில் பிறை வழிபாட்டினை நிகழ்த்தியுள்ளனர் என்பது தெரிகிறது. மாதத் திற்கு ஒருமுறை தோன்றும் மூன்றாம்பிறை நிலவினைப் பெண்கள் தொழுது நின்றதை.

**தொழுதுகாண் பிறையிற் றோன்றி யாநுமக்**
***கரிய மாகிய காலைப்***
**பெரிய தோன்றினிர் நோகோ யானே**
***(குறுந்.178:5-7)***

என்று நெடும்பல்லியத்தை எனும் புலவர் காட்சிப்படுத்தி உள்ளார்.

### மரவழிபாடு

மரங்களில் தெய்வம் உறைவதாக எண்ணிய மக்கள், மரங்களை வழிபடத் தொடங்கினர். இன்றளவும் மக்களின் வழிபாட்டில் மரங்கள் இடம்பெறுவதைக் காணலாம். மரவழிபாடானது தொடக்ககால மக்களின் வழிபாட்டுமுறை. உருவவழிபாட்டின் தொடக்கமாக மரவழிபாட்டினைக் குறிப்பிடலாம். மரவழிபாட்டில் ஆலமரம், வேம்பு, வேங்கை, பனை, அரசமரம் முதலியவை இடம்பெற்றுள்ளன.

ஆலமரத்தில் கடவுள் இருப்பதாக மக்கள் நம்பியதைக் "கடவுள் ஆலத்துத் தடவுச்சினை" (புறம். 199) எனும் அடி உணர்த்துகிறது. ஊரின் தொடக்கத்தில் உள்ள பழைய மரத்தில் தெய்வம் வீற்றிருந்து மக்களைக் காக்குமென்ற நம்பிக்கையினை,

***எம் ஊர் வாயில் உண்துறைத் தடைஇய***
***கடவுள் முது மரத்து உடன் உறை பழகிய***
***(நற். 83:1, 2)***

எனப் பெருந்தேவனார் காட்டுகிறார்.

### மலை வழிபாடு

பழந்தமிழர்கள்மரம், நீர், நிலவைவழிபட்டது போலவே, மலையிலும் கடவுள் வாழ்வதாக எண்ணி மலையினை வணங்கியுள்ளனர். தம் வாழ்விற்கானபொருட்களைக்கொடுத்துஉதவும்

மலையினை மக்கள் தெய்வமாகக் கருதியமை இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மலைபடுகடாம் எனும் பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றானது, முழுக்க முழுக்க மலையின் சிறப்பினையும் மலைவாழ் மக்களின் வாழ்வினையும் கூறுவதாகும். அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள மலை நவிர மலையாகும்.

***எருவை மென்கோல் கொண்டனிர் கழிமின்***
***உயர்நிலை மாக்கற் புகர்முகம் புதைய***
***மாரியி னிகுதரு வில்லுமிழ் கடுங்கணைத்***
***மாரி தலையுமவன் மல்லல் வெற்பே***

***(மலை. 225-233)***

என்ற பாடலடிகளின் மூலம், அம்மலையில் தெய்வத்தன்மை பொருந்தி இருப்பதால் இடையறாது மழைபெய்து செல்வவளம் பெருகியதாக மக்கள் நம்பியதை பெருங்கௌசிகனார் குறிப்பிடுகிறார்.

### மாலையில் விளக்கேற்றி வழிபடுதல்

வீட்டிலுள்ள மகளிர் மாலைக்காலத்தில் விளக்கேற்றி வழிபடும் பழக்கத்தினைக் கொண்டிருந்தனர். விளக்கினொளி நல்ல எண்ணங்களை வீட்டில் நிறைய செய்யும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்நிகழ்வு காலந்தோறும் பின்பற்றப்பட்டு வருகிறது. இன்றளவும் வீட்டில் எவ்வித நிகழ்வின் தொடக்கத்திலும் விளக்கேற்றி வழிபடும் நிலை தொடர்வதைக் காணமுடிகிறது. மக்களின் வழிபாட்டில் மாலையில் விளக்கேற்றும் மரபு தவறாது இடம்பெற்றிருந்ததை,

***வாம்ப லாயிதழ் கூம்புவிட வளமனைப்***
***பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி***
***யந்தி யந்தண ரயரக் கானவர்***

***(குறிஞ்சி. 223 - 225)***

என்று கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

### முடிவுரை

நம்பிக்கைகள் பழந்தமிழரின் வாழ்வியலோடு ஒன்றிணைந்துக் காணப்பட்டன. இயற்கையாக நடைபெறும் நிகழ்வினைத் தம்முடைய செயலுக்கான வினைனை ஏற்படுத்தும் சகுனமென மக்கள் நம்பிக் கொண்டிருந்த சூழல் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. வாழ்வில் நடக்கப்போகும் நன்மை, தீமைகளைச் சகுனங்கள்தான் தீர்மானிக்கின்றன என்ற பழந்தமிழ் மக்களின் நம்பிக்கைகள் இலக்கியத் தரவுகளின் வழி பதிவு செய்யப்பட்டுள்ளது. நம்பிக்கைகள் காலங்கடந்தும் மக்களின் மனதில் நீங்காது நிலைத்திருப்பதற்கான சான்றுகளுடன் கூறப்பட்டுள்ளன. பழந்தமிழர்கள் இயற்கையின் மீது கொண்டிருந்த அச்சத்தின் காரணமாக அவற்றை வணங்கத் தொடங்கினர். அவையே, பின்னாட்களில் இறைவழிபாடு தொடர்பான நம்பிக்கைகள் தோன்ற காரணமாக அமைந்தமை விளக்கப்பட்டுள்ளது.

### துணைநூற்பட்டியல்


1. சாரதாம்பாள்.செ., செவ்வியல், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை. *1988.*
2. காந்தி.க., தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. *2008.*
3. கைலாசபதி.க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், குமரன் பப்ளிகேஷன்ஸ், சென்னை. *1999.*
4. சிதம்பரனார். சாமி., எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், அறிவுப் பதிப்பகம், சென்னை. *2003.*